செய்தி வெளியீடு எண். 161 நாள்: 30.03.2020

**<u>கொரோனா வைரஸ் தடுப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் தொடர்பாக மாண்புமிகு ஊரக தொழில்துறை அமைச்சர் திரு.பா.பெஞ்ஜமின் அவர்கள், மாண்புமிகு தமிழ்ஆட்சிமொழி, கலைபண்பாடு மற்றும் தொல்லியல்துறை அமைச்சர் திரு.க.பாண்டியராஜன் ஆகியோர் தலைமையில், மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.மகேஸ்வரி ரவிக்குமார்,இ.ஆ.ப., அவர்கள் முன்னிலையில் ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது.</u>**

திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கத்தில், கொரானா வைரஸ் தடுப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் தொடர்பாக மாண்புமிகு ஊரக தொழில்துறை அமைச்சர் திரு.பா.பெஞ்ஜமின் அவர்கள், மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, கலைபண்பாடு மற்றும் தொல்லியல்துறை அமைச்சர் திரு.க.பாண்டியராஜன் ஆகியோர் தலைமையில், மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.மகேஸ்வரி ரவிக்குமார்,இ.ஆ.ப., அவர்கள் முன்னிலையில் இன்று (30.03.2020) ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது.

மாண்புமிகு ஊரக தொழில்துறை அமைச்சர் அவர்கள் செய்தியாகளிடம் கூறியதாவது

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணை மற்றும் அறிவுறுத்தல்களுக்கிணங்க திருவள்ளூர் மாவட்டத்தில் கொரோனா வைரஸ் தடுப்பு நடவடிக்கைகள் போர்கால அடிப்படையில் துரிதமாக நடைபெற்று வருகிறது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தல்களின்படி மாவட்ட நிர்வாகம் சார்பாக மக்களுக்கு முழவிழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகிறது. 15 மாநில எல்லைகள் மற்றும் 20 மாவட்ட எல்லைகள் ஆகிய இடங்கள் மூடிவைக்கப்பட்டு தீவிரமாக கண்காணிக்கப்பட்டு வருகிறது. வெளி மாநில மக்கள் உள்நுழையாமலும், மாவட்டத்தில் உள்ள மக்கள் வெளியில் செல்லாமலும் கண்காணிப்படுகின்றனர். மேலும், மாவட்டத்தில் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை, பொது சுகாதாரம், காவல், ஊரக உள்ளாட்சி, நகராட்சி, பேரூராட்சி, மாநகராட்சி ஆகிய துறைகளை சேர்ந்த 12896 நபர்கள் கள பணிகளில் ஈடுபட்டுள்ளனர். 9 வட்டங்களில் கொரோனா தடுப்பு நடவடிக்கைகளுக்காக துணை ஆட்சியர் அளவிலான அலுவலர்கள் நியமிக்கப்பட்டு பணிகளில் ஈடுப்பட்டுள்ளனர்.

கொரோனா தடுப்பு நடவடிக்கைகளுக்காக போதிய கிருமி நாசினிகளும், தடுப்பு உபகரணங்களும், டெட்டால் 619 லிட்டர், லைசால் 16445 லிட்டர், பிளிச்சிங்க் பவுர் 2395.5 மெ.டன், சோடியம் ஹைபோ குளோரைட் 1523 லிட்டர், என அனைத்தும் போதுமான அளவு இருப்பில் உள்ளது. 350 மகளிர் சுய உதவிக்குழுக்களை கொண்டு 48000 எண்ணிக்கையில் முக கவசங்கள் தயரிக்கப்பட்டு, தற்போது வெளியில் இருந்து பெறப்பட்டதையும் சேர்த்து 54000 முக கவசங்கள் இருப்பில் உள்ளது. அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகள் ஆகியவற்றில் தனிமைப்படுத்தப்பட்டுள்ளவர்களுக்காக 690 படுக்கைகளும் 46 வெண்டிலேட்டர்களும், தயார் நிலையில் உள்ளது. 58 நபர்கள் 28 நாட்கள் தனிமைபடுத்தப்பட்டுள்ளனர். இரண்டாம் கட்டமாக. 1955 தனிமைப்படுத்தப்பட்டுள்ளவர்களின் வீடுகளில் தனிமைபடுத்தப்பட்டு கண்காணிக்கப்பட்டு அறிவிப்பு ஸ்டிக்கர் ஒட்டப்பட்டு வருகின்றது. திருவள்ளூர் மற்றும் ஆவடி பகுதிகளில் 67 நபர்கள் ஆதரவற்ற நிலையில் உள்ளவர்கள் கண்டறியப்பட்டு, அவர்களுக்கு போதிய அத்தியாவசிய அடிப்படைகள் வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளது. 144 தடை உத்தரவை மீறியதாக 556 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளது. 600-க்கும் மேற்ப்பட்ட வாகனங்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது. 2 நபர்கள் மீது சமூக வளைதளத்தில் வதந்தி பரப்பியதாக கைது செய்யப்பட்டுள்ளனர். 144 தடை உத்தரவை மீறுபவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும்.

மாவட்டதிலுள்ள மொத்தம் உள்ள 1134 நியாய விலைக் கடைகளில் அத்தியவசிய பொருட்கள் மற்றும் நிவாரண நிதியினை வழங்கிட மாவட்ட நிர்வாகத்தின் சார்பாக நடவடிக்கைகள் மேற்க்கொள்ளப்பட்டுள்ளது.

திருவள்ளூர் மாவட்டத்தில், www.stopcoronatiruvallur.com என்ற இணையதளம் வாயிலாக கொடையாளர்கள் பொருட்களை தானமாக வழங்கவும், அத்தியாவசிய பொருட்கள் தேவைபடுபவர்களும் இந்த இணையதளத்தை பயன்படுத்திக்கொள்ளலாம். மாவட்ட காவல் கண்காணிப்பாளர்கள் அவர்கள் ஒரு ஆன்ட்ராய்டு செயலியினை தனிமைப்படுத்தப்பட்டுள்ளவர்களை வீடுகளில் கண்காணிக்க பிரித்யேகமாக வடிவமைத்து செயல்பாட்டுக்கு வழங்கியுள்ளார்.

கொரோனா வைரஸ் தொடர்பான தகவல்களை திரட்டி உடனுக்குடன் நடவடிக்கை மேற்கொள்ள மாவட்ட ஆட்சியரகத்தில் முழு நேரக் கட்டுப்பாட்டு அறை (24X7) ஏற்படுத்தப்பட்டு, பணியாளர்கள் முழு நேரமும் பணியாற்றி வருகின்றார்கள். இக்கட்டுப்பாட்டு அறையில் சுகாதாரத் துறை, வருவாய்த்துறை, ஊரக வளர்ச்சித்துறையில் பணியாற்றும் பணியாளர்கள் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளார்கள். பொது மக்கள் தேவையின்றி வெளியில் செல்வதை முற்றிலுமாக தவிர்க்க வேண்டும். வீட்டிலேயே தனிமைபடுத்திக்கொண்டு அனைவரும் தங்களையும் தங்கள் குடும்பத்தினரையும் பாதுகாத்துக் கொள்ள முழு ஒத்துழைப்பையும் வழங்க வேண்டும்.

உங்களுக்கும் உங்கள் குடும்பத்தினரும் நோய் பரவுதலில் இருந்து பாதுகாத்துக் கொள்வதற்கு முக்கியமாக வெளிநாடுகளிலோ அல்லது வெளிமாநிலங்களில் இருந்து வருகை புரிந்தவர்கள் உள்ளூர் நிர்வாகம் மற்றும் கட்டுப்பாடு அறை 04427664177, 04427666746, வாட்ஸ்ஆப் 9444317862 ஆகிய எண்களை தொடர்பு கொண்டு தகவல் தெரிவிக்க வேண்டும். திருவள்ளூர் மாவட்டத்தில் கொரோனா தொற்று எவருக்கும் இல்லை. இவ்வாறு மாண்புமிகு ஊரக தொழில்துறை அமைச்சர் அவர்கள் செய்தியாகளிடம் கூறினார்.

பின்னர், மாண்புமிகு ஊரக தொழில்துறை அமைச்சர் அவர்கள், மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, கலைபண்பாடு மற்றும் தொல்லியல்துறை அமைச்சர் அவர்கள், மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் ஆகியோர் சுகாதார மாவட்ட 24 மணி நேர அவசர கட்டுப்பாடு அறையினை நேரில் பார்வையிட்டு விவரங்களை கேட்டறிந்து கொண்டனர். அரசு அலுவலக வளாகத்தில் கிருமிநாசினிகளை தெளித்தனர்.

இந்நிகழ்ச்சிகளில் பொன்னேரி சட்டமன்ற உறுப்பினர் திரு.பி.பரலாமன், திருத்தணி சட்டமன்ற உறுப்பினர் திரு.பி.எம்.நரசிம்மன், அம்பத்தூர் சட்டமன்ற உறுப்பினர் திரு.வி.அலெக்சாண்டர், கும்மிடிப்பூண்டி சட்டமன்ற உறுப்பினர் திரு.கே.எஸ்.விஜயகுமார், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.பி.அரவிந்தன்,இ.கா.ப., மாவட்ட வருவாய் அலுவலர் திரு.வெ.முத்துசாமி, திட்ட இயக்குநர்கள் திருமதி.க.லோகநாயகி (மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை), திரு.வை.ஜெயக்குமார் (தமிழ்நாடு மாநில ஊரக/ நகர்புற வாழ்வாதார இயக்கும்), அரசு மருத்துவமனை (ம) அரசு மருத்துவக் கல்லூரி முதல்வர் மரு.அரசி ஸ்ரீவத்சவ், இணை இயக்குநர் (மருத்துவம் (ம) ஊரக நலப்பணிகள்) மரு.இளங்கோவன், திருவள்ளூர் சுகாதார மாவட்ட துணை இயக்குநர் (சுகாதாரப்பணிகள்) மருஜவஹர்லால், பூவிருந்தவல்லி சுகாதார மாவட்ட துணை இயக்குநர் (சுகாதாரப்பணிகள்) மரு.ஜெ.பிரபாகரன், மருத்துவர்கள், செவிலியர்கள் மற்றும் பல்வேறு துறை உயர் அரசு அலுவலர்கள் உள்ளனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், திருவள்ளூர்.**